**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.1386/2022**
**வழக்கு சாட்சி D.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணசாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : நாச்சிமுத்து | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : சத்திரப்பட்டி | வயது | : சுமார் 60 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 13.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான குறுக்கு விசாரணை**

வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை சொத்து விபரம் தவறு என்று சொல்லியுள்ள நிலையில் சரியான சொத்து விபரம் என்ன என்றால் ? 1 ஏக்கர் 20 செண்ட் சொத்தினை எனக்கு எழுதி வைத்துள்ளார்கள். எனது அன்னாருக்கு மற்ற சொத்துக்களை கொடுத்துவிட்டார்கள். மற்ற சொத்துக்களை எனது அன்னாருக்கு கொடுத்துவிட்டதாக சொல்லியுள்ள நிலையில் எப்போது கொடுத்துவிட்டார்கள் என்றால் ? 1987 ம் ஆண்டு கொடுத்துவிட்டார்கள். பத்திரத்தின் வழியாக கொடுத்தார்களா என்றால் ? ஆமாம். பத்திரம் பதிவு கொடுக்கப்பட்டுள்ளது. எனது சகோதரருக்கு எவ்வளவு சொத்துக்கள் கொடுக்கப்பட்டது என்றால் ? 8 ஏக்கர் கொடுக்கப்பட்டது. வாதி எவ்வளவு விஸ்தீரணத்திற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ? லதா அவர்கள் தனக்கு ஒரு பங்கு வேண்டும் என்று கேட்டுள்ளார். இருப்பதே ஒரு ஏக்கர் தான். இவ்வழக்கில் வாதி சில ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றால் ? சரிதான். அந்த ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் ? ஆமாம். பார்த்துள்ளேன். நான் உண்மைக்கு புறம்பாக சொல்கிறேன் என்றாலும், வழக்குரையில் சொல்லியுள்ள ஆவணங்களை நான் பார்த்திருக்கும்பட்சத்தில் லதா அவர்கள் 1 ஏக்கர் நிலத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று நான் சொல்லியிருக்க மாட்டேன் என்றாலும், வழக்கு பற்றியும்,

ஆவணங்கள் பற்றியும் சரிவர தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ? சரியல்ல. இறந்துபோன நாச்சிமுத்துக்கவுண்டர், காளியம்மாள் ஆகியோர்களின் வாரிசுகள் தான் நானும், வாதியும் என்றால் ? நான் தான் வாரிசு ஆவேன். வாதி வாரிசு கிடையாது. நாச்சிமுத்துக்கவுண்டர் மற்றும் காளியம்மாளுக்கு வாதி என்ன உறவுமுறை என்றால் ? பேத்தி என்ற உறவு ஆகிறது. என்னுடன் பிறந்த சகோதரியின் மகள். லதா என்பவரின் தாயார் பெயர் நாச்சம்மாள் ஆகும். தாவா சொத்துக்கள் நாளது தேதி வரை கூட்டாக சுவாதீனத்தில் உள்ளது என்றால் ? இல்லை. வாதிக்கும் தாவா சொத்துக்களில் 1/40 பாகம் இருப்பதாகவும், அதை பிரித்து கொடுக்கும்படியும் கேட்டார்கள் என்றால் ? சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து எனது பெயரில் உயில் சாசனம் ஏற்பட்டுள்ளது. தாவா சொத்துக்களை பொறுத்து எனது பெயருக்கு உயில் சாசனம் எழுதி வைத்துள்ள நிலையில் வருவாய் துறை ஆவணங்களான பட்டா, சிட்டா ஆகியவற்றில் எனது பெயருக்கு பெயர் மாற்றம் ஏற்படுத்திக் கொண்டேனா என்றால் ? ஆமாம். மாற்றிக் கொண்டோம். பட்டா எண் என்ன என்றால் ? பட்டா எண்.320 ஆகும். வரி செலுத்திவருகிறேனா என்றால் ? ஆமாம். நான் சொல்வதை போல் எனது பெயரில் பட்டா மாறுதல் ஏற்பட்டுவிட்டது என்றாலும், நான் வரி செலுத்தி வருகிறேன் என்று சொல்லியுள்ளதற்கு நீதிமன்றத்தில் இருந்து எவ்வித ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரியல்ல. நான் சொல்லியுள்ளதை போல் எனது தகப்பனார் எந்தவொரு உயில் சாசனம் எழுதி வைக்கவில்லை என்றாலும், நான் உயில் சாசனத்தை பொய்யாக உற்பத்தி செய்துகொண்டேன் என்றாலும் ? சரியல்ல. வாதி தாவாவில் கோரியுள்ளவாறு 1/40 பாகம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் ? சரியல்ல. வாதியின் பாக உரிமையை மறுப்பதற்காக நான் உற்பத்தி செய்த உயில் சாசனம் செல்லத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.13 18:42:25 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்